உண்மை நிலைமை இவ்வாறிருக்க, சட்டமன்ற மரபுகளுக்கு மாறாக, புதிய அறிவிப்புகளை நான் வெளியிட்டேன் என்று பொறுப்புள்ள துணை முதலமைச்சர் பதவியை வகித்த திரு. ஸ்டாலின் கூறியிருப்பது, அவரது அறியாமையைக் காட்டுகிறதா? (மேசையைத் தட்டும் ஒலி) அல்லது வேண்டுமென்றே தவறான குற்றச்சாட்டுக்களையும், களங்கத்தையும் எங்கள் அரசின்மீதும் என்மீதும் சுமத்துகிறாரா? என்பதை அவர்தான் தெளிவுபடுத்த வேண்டும் என்று தெரிவித்து, எதிர்க்கட்சியாக இருந்தபோதே, பேரவை மரபுகளுக்கு மாறாக "பால் கமிஷன்" அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர் தி.மு.க. தலைவர் கருணாநிதிதான் என்பதையும் இந்தத் தருணத்தில் நினைவூட்டி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No, no. Please sit down. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு உண்மையை சொல்லியிருக்கிறார். அது நடந்தது. அதைத்தான் சொல்லியிருக்கிறார். நடக்காததைச் சொல்லவில்லையே! (குறுக்கீடுகள்) Please sit down. இறுதியில் குறிப்பிட்டது மாதிரி நடந்ததா இல்லையா? அதைச் சொல்லுங்கள்? (குறுக்கீடுகள்) Please sit down. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

(ஆ) காவிரி நீர் தமிழகத்திற்கு வழங்கப்படமாட்டாது என்று கர்நாடகச் சட்டமன்றத்தில் தெரிவித்தது

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் கர்நாடகச் சட்டசபையில் தமிழகத்திற்கு முறையாக, நியாயமாக நடுவர்மன்றத் தீர்ப்பின் அடிப்படையில் வழங்க வேண்டிய நீர் (குறுக்கீடுகள்) இனிமேல் ஒரு சொட்டு தண்ணீர்கூட வழங்கப்பட மாட்டாது என்று கர்நாடகச் சட்டசபையில் முதலமைச்சர் அவர்களும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இன்றைக்குத்தான் அதுகுறித்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) No, please sit down. நீங்கள் இன்றைக்குத்தான் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: அதேபோல, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் தெரிவித்திருப்பது என்பது தமிழகத்தைக் கடுமையாக பாதிக்கக்கூடிய ஒரு நடவடிக்கையாகக் கருதி (குறுக்கீடுகள்) அதை அவசரமாக எடுக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கின்றேன். இது தமிழகத்தினுடைய முக்கியமான உணவு சம்பந்தப்பட்ட பிரச்சினை.

2012 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் நீங்கள் இன்றைக்குத்தான் என்னுடைய அறைக்கு வந்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது துறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. பதில் வந்தவுடன் அதுகுறித்துப் பரிசீலிக்கலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து அமரவும். (குறுக்கீடுகள்) இல்லை. இன்றைக்குத்தான் உங்கள் உறுப்பினர் பேசுகிறாரே! (குறுக்கீடுகள்)

இன்றைக்கு பட்ஜெட் மீதான விவாதத்திலே உங்கள் உறுப்பினர் பேசுகிறார், இல்லையா? உங்கள் கருத்தை அவரிடம் சொல்லிச் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) Please sit down. (குறுக்கீடு)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(முற்பகல் 11–05

4. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)–ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக–Panel of Chairmen—நியமிக்கிறேன்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

திரு. தங்க தமிழ்ச்செல்வன்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. பி.ஜி. நாராயணன்

திரு. சு. குணசேகரன்.